எஸ்.டி.சி எண். 337/2022 தேதி:05.02.2025

<u>ம.சா.1 ஆன திரு. எ.ஆர். யூசப் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.</u>

இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த காசோலையானது எதிரி ஜெயக்குமார் என்பவரின் தனிப்பட்ட காசோலை அல்ல என்று சொன்னால் அது குறித்து அவருக்குத் தான் தெரியும். இவ்வழக்கு காசோலையானது JBS Electricals (Proprietor) என காணப்படுகிறது என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. நான் JBS Electricals (Proprietor) க்கு எவ்வித சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிரி தான் வழக்கு காசோலையை பூர்த்தி செய்து எனக்கு கொடுத்தார். காசோலையில் எனது பெயர் எழுதப்பட்ட கையெழுத்திற்கும் அதற்கு அடுத்த வரியில் எழுதப்பட்ட கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கு காசோலை இரண்டாம் முறை பணமில்லாமல் திருப்பப்பட்ட பிறகு தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.